## 53. தேவனுக்கு கீழ்படிந்திரு

### பல்லவி

தேவனுக்கு கீழ்படிந்திரு
சாத்தானுக்கு எதிர்த்து நின்றிடு
அப்போது உன்னை விட்டு ஓடிடுவான்
நீயும் தேவனை தேடிடுவாய்

### சரணங்கள்

1. ஆபிரகாம் தேவனுக்கு கீழ்படிந்தான்
அவர் சொல்லைகேட்டு நடந்துவந்தான்
பூமியில் இருக்கும் மனிதருக்கு
உயர்ந்த தகப்பனாக மாற்றப்பட்டான்
- தேவனுக்கு

2. தேவனாகிய கர்த்தரின் சத்தம்
கவனமாய் கேட்டு நடந்து வந்தால்
எகிப்தியருக்கு வந்த வியாதி ஒன்றையும்
உனக்கு வராமல் காத்திடுவார்
- தேவனுக்கு

3. பலியை பார்க்கிலும் கீழ்படிதல்
உத்தமம் அதுவே மேலானது
நீயும் தேவனுக்கு கீழ்படிந்தால்
கீழாக்காமல் உன்னை மேலாக்குவார்
- தேவனுக்கு